

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீமத வாநாசல முநயே நம:

ககநகிரிமுநி குருபரம்பரா ப்ரபாவம்

[ஸ்ரீ வானமாமலை மடத்துப பீடாதிபதிகளாகிய ஸ்வாமிகளுடைய வைபவம]

பணடிதரதனம திருககணணபுரம
சௌ. ஸ்ரீநிவாஸாசார்யாரால் (சிரோமணி)
பரிசோதிககபபடடது

ஸ்ரீ வானமாமலை மடம் 27-வது பட்டம்
ஸ்ரீமத் பரமஹமஸ பரிவ்ராஜகாசாயரான
சினன ராமாநுஜ ஸ்வாமியின நியமனத்தால
வெளியிடபபடடது

மதராஸ்

துாமுகி வருஷம சித்திரை மாதம

விலை ரூ. 1-12-0

முதற்பதிப்பு—ஏப்ரல் 1956

பிரதிகள் 1000

பாரதி விஜயம் பிரஸ், திருவல்லிக்கேணி மதராஸ்-5

முதலாவது வானமாமலை ஸ்வாமி



27-வது பட்டம் ஸ்ரீ சின்ன ராமாநுஜ ஸ்வாமி

முகவுரை

ககநகிரிமுநி குருபரமபரா பரபாவம

பினபழகராம பெருமாள ஜீயா அருளிசசெயத குருபரமபரா பரபாவம, ஆழவாரகள வைபவம தொடஙகி உடையவா வைபவததைப பரககக கூறி நமபிளளை வரையிலுளள ஆசாரயாகளின வைபவஙகளைக கூறிறறு. பிளளைலோகம ஜீயர அருளிச செயத யதீநதர பரவண பரபாவம், நமபிளளையின சிஷயாகளான வடககுத திரு வீதிப பிள்ளை, பெரிய ஆச்சானபிளளை தொடங்கி ஆசாரயாகளின வைபவஙகளைப பேசி வந்து யதிவர புநரவதாரமான மணவாள மாமுனிகளின வைபவஙகளைப பரகக நிருபிததது. அந்த மணவாள மாமுனிகளின அஷடதிக கஜஙகளில பரதமத்தில எடுககப்பட்டு அவர் பரதம சிஷயராய, அவரது பாதரேகாஸமராய், "பொனனடிக கால ஜீயா" எனப போறறப பெறறு, அவரால் வானமாமலை பீடத்தில தமககு பரதிநிதியாய ஸதாபிககப பெறறு, தாசனதன்த்த தழைததோஙகுமபடி பரவாததனம செயய நியமிககப பெறறவா வானமாமலை முதலாவது (ஒனறுன) ராமாநுஜ ஜீயர் ஸவாமி ஆவார. அநத ஸவாமி தொடஙகி அநதப பீடததை அலங்கரிததது எழுநதருளியிருநத ஸவாமிகளின வைபவஙகளைக கூறுகினறது இந்த கரநதம். முதலாவது ஸவாமியின அவதாரம, மாமுனிகளை ஆசரயிததது முதல நிதய விபூதிககு எழுந

தருளியது ஈருகவுளள அவரது வைபவஙகள, இவறறை “ஸ்ரீவரமஙகை முனி வைபவம” விஸதாரமாகக கூறிறறு. எனவே இநத கரநதம, அவரது சரிததிர வைபவததில நோககினறி அவா அவதார மெனபதையும அவரது ஆசாரயத்வததையும “மணவாள மாமுனிவன பொனனடியாம செஙகமலப போதுகள” அவரே எனபதையும முதலில பரமாணஙகளுடன நனகு நிரூபணம செயதது, இநத பரஸஙகததில முதலில மாமுனிகளின சரிததிரததைச சுருககிக கூறி அவரது வாழித திருநாமஙகள பலவறறையும வெளியிடடிருககிறது. பினபு முதலாவது வானமாமலை ராமானுஜ ஜீயா ஸவாமி தொடஙகி வானமாமலை ஆசாரய பீடததில நியமிககபபடடுப பரமபரையாய எழுநதருளியிருநத ஸவாமிகளின வைபவஙகள எலலாவறறையும இநத கரநதம கூறுகினறது எனவே இது “ககநகிரிமுநி குருபரமபரா பரபாவம” எனப பெயா பெறறது. இதில முககியமாகக கூறபபடும விஷயஙகளாவன அநதப பீடததில எழுநதருளியிருநத ஸவாமிகளின அவதார தினஙகள, திருநக்ஷதரத தனியனகள, வைபவத தனியனகள, வாழித திருநாமஙகள, சீாகள, அநதப பீடததில அவாகள அமாநத காலம, மொததம எழுநதருளியிருநத ஸமவதஸரஙகள, வானமாமலையிலும மறறுமுளள திவய தேசஙகளிலும, அவாகள செயதருளிய கைஙகாயஙகள, திகவிஜய யாதரைகள, திவய தேசஙகளின மஙகளாசாஸநஙகள, மடததுககுச் சேமிதது வைதத நிதிகள, முதலியனவாகும. இதில, 26-வது படடததை அலஙகரித்த ஸ்ரீமதுரகவி ராமானுஜ ஸவாமி ஈருகவுளள

ஸவாமிகளின வைபவஙகளைக காணலாம. 27-வது படடததை அலஙகரிததுத தறபொழுது எழுந்தருளியிருககும ஸ்ரீசினன ராமானுஜ ஜீயா ஸவாமி செயதருளிய கைஙகாயஙகள ஆழவாா திருநகரித திருததோ கைஙகாயம, உளளூரில விமான பரதிஷடை முதலியனவாகும.

இததகைய கரநதம ஆசாாயாகளின சரிதமெனபது மாததிரமினறி சரிததிர முகயததுவமும வாயநததுமாகும. இது நீணட காலம நமது விசிஷடாதவைத ஸமபரதாய விஷயததில இநத மடம ஆதிமுதல ஆறறி வநதுளள பணிகளை நனகு அறிவுறுததவலலதுமாகும. தறகாலததிய பாமர ஜனஙகளின மனதில இததகைய தொணடுகளைத தூணடுவதறகும இது ஏதுவாகலாம. எனவே இதன முகயத தனமையை உணாநதே வாததமான ஸவாமி 27-வது படடம சினன ராமானுஜ ஜீயா ஸவாமி நியமனததால மடததின ஆதரவிலேயே இநத கரநதம அசசிடடு வெளியிடபபடடது. பழைய நாடகளில அநதநத ஸவாமிகள எழுநதருளியிருநத காலததில நிகழநத வைபவஙகள பெரியோாகளால தொகுதது எழுதபபடடு மடததுப புஸதக சாலையில இருநதன. அசசு வசதி ஏறபடட பின சில ஸவாமிகளின வைபவஙகள மாஸ ஸஞசிகைகளிலும வெளிவநதிருநதன. அவைகளில் வெகு நீளமாக எழுதியிருநத வாகயஙகளைப பிரிததுப பல வாகயஙகளாககியும, அதிக ஸமஸகருத பதஙகளை அகறறியும, பாமர வழககுசசொறகள கலநதிருநதவறறை நீககியும வீணவளாததல இனறிச சுருககியும, கூடுமான வரையில பிழைகளைப போககியும இநத நூல தொகுத்து

வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன் வெளியிட்டுள்ள "ஸ்ரீவரமங்கை முனி வைபவம்", அடியேனது தமிழ் உரையுடன் வெளியிடப்பட்ட ப்ரபத்தி மங்களாசாஸந க்ரந்தங்கள் இவை பெரியோர்களது பாராட்டைப் பெற்றுள்ளன. ஸ்ரீஸ்வாமியின் கருணை கடாக்ஷத்தினால் இந்த க்ரந்தத்தையும் அச்சிடும்படியான இச்சிறு தொண்டு நியமிக்கப் பெற்றுப் பூர்த்தியையும் பெற்றுள்ளது.

இந்த மூன்று க்ரந்தங்களும் நமது வானமாமலை மடத்து ஸம்ப்ரதாயத்தில் ஈடுபாடுள்ள சிஷ்யகோஷ்டிகளுக்கு இன்றியமையாதவையாகும். ஆகையால் இவைகளை வாங்கிப் படித்து ஆசார்ய சரிதங்களை உணர்ந்து அவ்வழி யொழுகி நன்னெறி பெறுமாறு வேண்டுகின்றேன்.

ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீபாததூளி
பண்டித ரத்னம் திருக்கண்ணபுரம்
சௌ. ஸ்ரீநிவாஸ தாஸன்,
திருவல்லிக்கேணி.

பொருளடக்கம்

(வைபவ விவரங்கள்)

		பக்கம்
	ஸ்ரீமணவாளமாமுனிகள்	2
1.	முதலாவது வானமாமலை பெரிய ராமானுஜ ஜீயர் ஸ்வாமி	11
2.	இரண்டாவது களமூர் வரதமுனி	38
3.	மூன்றாவது செண்டலங்கார ராமானுஜ ஜீயர் ஸ்வாமி	34
4.	நான்காவது ரங்கப்ப ராமானுஜ ஸ்வாமி	47
5.	ஐந்தாவது திம்மையங்கார் என்னும் திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி	52
6.	ஆறாவது எம்பெருமானார் ஸ்வாமி	56
7.	ஏழாவது பெரிய திருவேங்கட ஸ்வாமி	59
8.	எட்டாவது கோனப்ப ஸ்வாமி	62
9.	ஒன்பதாவது சின்ன ரங்கப்ப ஸ்வாமி	64
10.	பத்தாவது திருவேங்கட ஸ்வாமி	67
11.	பதினொன்றாவது பெரிய தெய்வநாயக ஸ்வாமி	70
12.	பன்னிரண்டாவது சின்ன திருவேங்கட ஸ்வாமி	79
13.	பதின்மூன்றாவது சின்ன தெய்வநாயக ஸ்வாமி	85
14.	பதினான்காவது கூரத்தாழ்வான் ஸ்வாமி	87
15.	பதினைந்தாவது ஸ்ரீவத்ஸ சிஹ்ன ஸ்வாமி	90
16.	பதினாறாவது திருநகரி திருவேங்கட ஸ்வாமி	94
17.	பதினேழாவது திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி (கோயில்)	102

		பக்கம்
18.	பதினெட்டாவது பெரிய சடகோப ராமாநுஜ ஸ்வாமி	111
19.	பத்தொன்பதாவது பெரிய பட்டர்பிரான் ஸ்வாமி	124
20.	இருபதாவது கலியன் ராமானுஜ ஸ்வாமி	146
21.	இருபத்தொன்றுவது மதுர்கவி ராமானுஜ ஸ்வாமி	156
22.	இருபத்திரண்டாவது யோகி ராமானுஜ ஸ்வாமி	168
23.	இருபத்து மூன்றுவது சின்ன சடகோப ராமானுஜ ஸ்வாமி	174
24.	இருபத்து நான்காவது சின்னப் பட்டர்பிரான் ஸ்வாமி	183
25.	இருபத்தைந்தாவது ஸ்ரீ கலியன் ராமானுஜ ஸ்வாமி	190
26.	இருபத்தாறுவது ஸ்ரீ மதுரகவி ராமானுஜ ஸ்வாமி	221
27.	இருபத்தேழாவது **வர்த்தமான** சின்ன ராமானுஜ ஸ்வாமி	229

ஸ்ரீ வரமங்காஸமேத தேவநாயக ஸ்வாமிநே நம:||

ஸ்ரீமதே ராமானுஜார்ய நம :||

ஸ்ரீமத வர வரமுநயே நம :||

ஸ்ரீமத வாநாசல முநயே நம :||

ககநகிரிமுநி குருபரம்பரா ப்ரபாவம்

[1] *ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் |*
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||
ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர பாதரேகாமயம் ஸதா |
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமானுஜமுநிம் பஜே ||

இந்த க்ரந்தம், அழகிய மணவாள மாமுனிகள் தொடங்கி அவர் திருவடிகளில் ஆச்ரயித்து அவர் பாத ரேகாமயராய, வைராக்யாதி கல்யாண குணபூஷிதரான,

---

1 श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादि-गुणार्णवम् ।
यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरम्मुनिम् ॥
रम्यजामातृयोगीन्द्र-पादरेखामयं सदा
तदायत्तात्मसत्तादिं रामानुजमुनिं भजे ॥

பெரிய வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, அவரால் நியமிக்கப்பட்டுப் பரம்பரையாக அந்த ஆஸ்தானத்தை அலங்கரித்தவர்களான மற்றைய ஜீயர் ஸ்வாமிகள்—இவர்களின் வைபவங்களுக்கு ப்ரகாசகமுமாய், அவர்கள் வாழித் திருநாமங்கள், சீர், நாள் பாட்டுகள், அவதார தினங்கள் இவற்றுக்கு ப்ரகாசகமாய தனியன்களை, நித்யத் தனியன்கள், தீர்த்த தின ச்லோகங்களை, மற்றும் கோயில் முதலிய திவ்ய தேசங்களில் இவர்கள் செய்தருளிய அந்தரங்கக் கைங்கர்ய விசேஷங்களை, முதலியவற்றை நன்குற ப்ரதிபாதிப்பதாகும்.

1 அழகிய மணவாள மாமுனிகள்—இவர், ப்ரபத்தி மார்க்கம் ஸங்குசிதமாக நடந்து செல்வது கண்டு, ஜகத் ரக்ஷண சிந்தாயுக்தரான பெரிய பெருமாள், லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும் விரகு சிந்தித்து, தமது திருவணையான திருவநந்தாழ்வானை மறுபடியும் அவதரிக்கும்படி நியோகம் செய்ய, அவரும் திருநகரியிலே திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணரையருக்குத் திருக்குமாரராய் அவதரித்தார் தேசந் திகழும் திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்து, ஜ்ஞாதவ்ய ஸகலார்த்தங்களையும் அறிந்து, ஸகல சாஸ்த்ரஜ்ஞராய், எம்பெருமானார் திருவடிகளில் பராவண்ய விசேஷத்தாலே "யதீந்த்ரப்ரவணர்" என்று அழைக்கும்படி யிருப்பாராய், திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரத்தை அநவரதாநு ஸந்தானம் பண்ணி முப்பத்தாறாயிரப் பெருக்கராய், பெரிய பெருமாள் நியோகத்தைப் பெற்று ஸ்ரீரங்கத்தில் நித்ய வாஸம் செய்யுமவராய் எழுந்தருளியிருந்தார் ஸ்ரீ ரங்கநாதனும் இவருடைய காலக்ஷேப வைகரியைக் கண்டு மிகவுமுகந்து தமது திருமுற்றமான கருட மண்டபத்திலேயே திருவாய்மொழியை வ்யாக்யானங்களுடன் அருளிச் செய்யும்படி நியமித்து இப்படி ஒரு வருஷம் நடந்து தாம் தம் தேவிமாருடன் இவருடைய வ்யாக்யான சைலியைக் கேட்டு அதித்ருப்தராய் சாற்று

முறை தினத்தில் தாம் தமது பரிகரத்துடன் எழுந்தருளி யிருந்து, தாம் மணவாள மாமுனிகளுக்குச் சிஷ்யனுனமை தோற்ற அழகிய மணவாள பட்டரான அர்ச்சக குமாரராய் ஐந்து வயதாகிய ரங்கநாயகன் என்னும் சிறுவனிடம் ஆவே சித்துப் பெரியோர்களின நடுவில் தடுத்தும் நில்லாது, அவன் தன்னறிவின்றியே "ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்" என்னும் தனியனை ஓதும்படி செய்தும், அதை ஸந்நிதிகள் எல்லா விடங்களிலும் ப்ரபந்த ஆதி அந்தங்களில் ஓதும்படி நியமித்ததும், இபபொழுதும் எல்லா ஸந்நிதிகளிலும் அத் தனியன் அநுஸந்திக்கப்பட்டு வரும்படியான இவரது வைபவம் வாசா மகோசரம். அது யதீந்த்ரப்ரவண ப்ர பாவம், ப்ரபந்நாம்ருதம் முதலிய க்ரந்தங்களில் பரக்க அருளிச் செயயப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவர் அவதார தனியன —[1] ப்ராதோராவம் கதாயாம் கலியுகசரதி ச்ரததராயே சகாப்தே வர்ஷே ஸாதாரணுக்யே ஸமதிகத துலே வாஸரே தீர்த்தஸங்க்யே॥ வாரே ஜீவே சதுர்த்யாம் ஸமஜநிச திதௌ சுக்லபக்ஷே ஸுகர்மா, ப்ராஜந மூலாக்யதாரே யதிபதி ரபரோ ரம்ய ஜாமாத்ரு நாமா ॥

என்கிறபடியே கலிபிறந்து நாலாயிரத்து முந்நூற்று எழுபத்தோரு வருஷத்திற்குப் பின்பு ஸாதாரண வருஷம் ஐப்பசி மாஸம் சுக்ல பக்ஷம் சதுர்த்தி வியாழக்கிழமை கூடிய லோகக்ஷேம மூலமான திருமூலத் திருநக்ஷத்திரத் திலே இவர் அவதரித்தார்.

---

[1] प्राथोरावं गतायां कलियुगशरदि श्रद्धराये शकाब्दे वर्षे-साधारणाख्ये समधिगततुले वासरे तीर्थसङ्ख्ये । वारेजीवे चतुर्थ्यां समजनिच्च तिथौ शुक्लपक्षे सुकर्मा श्राजन्मूलाख्यतारे यतिपति रपरो रम्यजामातृनामा ॥

இவரது நிதயத் தனியன் —ச்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்| யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்||

இவர் சீர்:—

வாழி திருவாய மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும்மணவாள மாமுனிவன்—வாழியவன
மாறன் திருவாய மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படி யுரைக்கும் சீர்.

வாழித திருநாமஙகள .—

செயய தாமரைத் தாளிணை வாழியே
சேலை வாழி திருநாபி வாழியே
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே
சுநதரத திருததோளிணை வாழியே
கையு மேநதிய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புநதி வாழி புகழ்வாழி வாழியே. (1)

அடியார்கள வாழ அரங்க நகர்வாழ
சடகோபன் தண்டமிழ நூல்வாழ—கடல்சூழநத
மண்ணுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும் (2)

இப்புவியில் அரங்கேசர்க் கீடளித்தான் வாழியே
எழில்திருவாய மொழிப்பிள்ளை இணையடியோன்
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே [வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனநதனென்றும் வாழியே

எப்புவியும் சீசைல மேத்தவந்தோன் வாழியே
ஏராரும் எதிராச ரெனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே
மூதறியும் மணவாள மாமுனிவன் வாழியே. (3)

முந்தைமறைத தமிழுரைக்கும் முத்திரைக்கை வாழியே
முந்நூலும் திருமார்பும் முக்கோலும் வாழியே
உந்தியமைத திருவரையும் உடையழகும் வாழியே
ஒருநாளும் மறக்கவொணு ஒளிமுறுவல் வாழியே
சிந்தைதனைக் கொண்டருளும் திருமேனி வாழியே
செங்கருணை குடியிருக்கும் திருநயனம் வாழியே
வந்தருளி எனையெடுத்த மலர்த்தாளகள் வாழியே
மணவாள மாமுனிவன் வாக்கின்பம் வாழியே. (4)

தினைப்பொழுதும் தனைமறவாச சிநதைதந்தோன் வாழியே
சீர்திருவாய மொழிப்பிள்ளை சீருடையோன் வாழியே
நினைப்பவர்கள பிறவிதனை நீக்குமவன் வாழியே
நீள்புவியில் தன்புகழை நிறுத்தினுன் வாழியே
அனைத்தாழவார் கலைப்பொருளை ஆயநதுரைபபோன்
அழகாரு மெதிராசர்க் கனபனா வாழியே [வாழியே
எனைபபோலும் பாவியர்கட் கிரங்குமவன் வாழியே
என்னப்பன் மணவாள மாமுனிவன் வாழியே. (5)

சீராரும் செங்கமலத் திருவடிகள் வாழியே
திருமருங்கில் துவராடை யுடையழகும் வாழியே
ஏராருந் திருநாமம் இலங்குபுயம் வாழியே
எப்பொழுதும் சங்காழி ஏந்துமவன் வாழியே
கார்போலும் செங்கையுறை முக்கோலும் வாழியே
கருணைகுடி கொண்டருளும் கண்ணிணைகள் வாழியே

வார்காதுந் திருநாம மணிநுதலும் வாழியே
மணவாள மாமுனிவன் மௌலியென்றும் வாழியே.(6)

கருதிவந்த அறுசமய நீசரொடு கலிகடிந்த செந்திறலும்
வாழியே
கழல்வணங்கி நினைவோர்கள் தீயவினை
களைநதிடுநற் கருணைமிக வாழியே
திருவிளங்கு புரிநூலும் மாசில்லாத திருவரைச்செந
துவராடை வாழியே
சகம்வணங்கு திரிதண்டு மாகியொளி
செம்பொன்சேர் மேனிமிக வாழியே
அருணவொண் கிரணமணி திகழ்ந்திடுவா
ளரவமளி யதுதனிலே மேவி
அழகமர்ந்து விழிதுயிலு நங்குரி சிலணியரங்கர்
பதமலருள ளார்நத
மருவினிய மனுகொண்ட எதிராச மாமுனியும்
மறையும்
வாழவரு மணவாள மாமுனிவன் ஊழிதொறும்
மிகவாழி வாழியே, (7)

செந்தமிழ வேதியர் சிநதை தெளிந்து சிறநது
மகிழ்ந்திடு நாள்
சீருல காரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதி ராசர்தம் வாழவு
முளைத்திடு நாள்
கந்த மலர்ப்பொழில் சூழ்குரு காதிபன கலைகள
விளங்கிய நாள்
காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள்
களித்திடுநாள்

அந்தமில் சீரமண வாள முனிப்பர னவதரித் தருளியநாள்
அழகு திகழுந்திடு மைப்பசி யிலதிரு மூலமதெனு நாளே.
(8)

சதுமறையு முபநிடத மவையாவும் நாரணனை வணங்க
வருநாள்
சகலகுண சர்பன்ன ரெதிராசர் பாடியமு மோங்க
வருநாள
மதிதவழு மணிமாட மதிளரங்கா மாறனுரை கேடக
வருநாள்
வளையாழி பொறிகொணட தோளின்மிசை சீரியர்கள்
கூட வருநாள்
பதியொருநூற் றெட்டவையுள் சிசைல மனுநெறியோர்
ஓத வருநாள்
பல்லாண்டு பாடியிவர் வாழ்கவினி நெடிதுமென
ஒலிக்க வருநாள்
அதிமதுர கவிராசர் சடகோபர் தாளிணைகள் ஏத்த
வருநாள்
அழகாரு மாமுனிவன் படிவநத ஐப்பசியில்
மூல மெனுநாள. (9)

வாதுசெய என்றுசில வாதியாகள் வநதுமன
முறியவெதிர் நிற்ப ரொருபால்
வாழியென வேபெரிய சாபமற என்றுசிலா
வந்தனைகள் செய்வ ரொருபால்
போதுமினி வாதமுன பாதமருள் என்றுபுகழ்
கொணடுசிலா நிற்ப ரொருபால்
பொங்கிவரு மெங்கள்வினை மஙகவரு ளென்றுசிலர்
போற்றியெதிர் நிற்ப ரொருபால்
ஈதிவைகி டக்கமறை நூற்றமிழ்தெ ரிந்துசிலர்
ஏதமற வாழவ ரொருபால்

ஏதமற வாதுலர்கள் பேதையர்கள் மயங்கிநிரை
செய்துகொடு நிற்ப ரொருபால்
மாதகவி ஞூலக மேழையும ளிக்கவென வந்தவெதி
ராச னடிசேர்

மாமுனிவர் தீப மருளாளர் மணவாளமுனி
மன்னுமிடம் வாழும் வளமே,(10)
தீய இருவினைகள் போயிடவும் தேறு மனமுடைய
தோர்திறலும்
காய மினியணுகா வகையும் காசி னியில்மிக வறுவொழிவும்
மாய னடியிணைக ளோடுறவும் வாழவும் பரமபத மேயுதவும்
சீயர் திருவடிக ளேசரணம் சீயா திருவடிக ளேசரணம் (11)

துங்கப் புயமும் புரிநூலும் சோதி மதிமுகமும்
தங்கு கருணைத தடங்கணணும் செநதா மரைக்கழலும்
மங்கைக கலிய னருள்கொணட மாமண வாளமுனி
செங்கைத் தலஞ்சோ திருதணடும் சிநதை யுறைநதனவே(12

இவர் எம்பெருமான் திருவுளளத்திற்கு அதிசயாவஹ மாயச செய்தருளிய கைஙகர்ய வைபவஙகளாவன

இவரது ஆசார்யரான திருவாயமொழிப் பிள்ளை இவரை அழைத்து சபத புரஸ்ஸரமாய் "ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில பல காலும கண வையாதே ஸ்ரீ பாஷ்யத்தை ஒருகால் கேட்டும் பரவசனம செயதும நமக்கும் எம்பெருமானுருககும் ப்ரியமாகத் திருவாயமொழி முதலான அருளிச் செயல்களிலே அநவரதம் பரிசீலனம் பண்ணிக் கொண்டு பூர்வர்களைப் போலே பெருமாளுககு மங்களா சாஸநபரராய் கோயிலிலே நித்யவாஸமாக எழுந்தருளியிரும்" என்று நியமித்தபடியே ஜீயரும் ஸ்வாபீஷ்ட சிஷ்யரான வானமாமலை ராமானுஜ ஜீயருடன கோயிலிலே நிரய வாஸமாய் எழுந்தருளியிருந்து,

[1] "ஸ்ரீமத் ரங்கம் ஜயது பரமம் தாம தேஜோநிதாநம், பூமா தஸ்மிந் பவது குசலீ கோபி பூமாஸஹாய | திவ்யம் தஸ்மை திசது விபவம் தேசிகோ தேசிகாநாம் காலே காலே வரவரமுநி கலபயந மங்களாநி ||"

என்கிறபடியே பெரிய பெருமாளுக்கு அதிசயாவஹமான மங்களாசாஸநபரராய் நித்ய வாஸமாய எழுந்தருளியிருந்து, பூருவாசாரியர்கள் போதமனுட்டானங்களையும் ஆராய்ந்து அனுஷ்டிக்குமவராய் தர்சந ஸாம்ராஜயம் பண்ணித் திசை விளக்காய நிற்கின்ற திருவரங்கத்திலே திக்குற்ற கீர்த்தியை யுடையராய், ஸ்ரீரங்க ஸ்ரீக்கு மங்கள தீபம் போலே

[2] "ஸமுநிஸ் ஸௌம்ய ஜாமாதா ஸர்வேஷாமபி பச்ய தாம் | ஸ்ரீஸகஸ்ய நிதேசேந சிச்ரியே தேசிகச்ரியா || "

என்று தேசிக ஸ்ரீயாலும் மிகவும் விளங்கா நிற்க, இதைத் தேசாநதரஸ்தரெல்லாரும் கேட்டு,

[3] "தத. ஸமுத்ஸுகா ஸர்வே சதசோதஸ ஹஸ்ரச ||"

என்கிறபடியே தேசாத் தேசங்களில்நின்று வந்து அநேக மாயிரம் பேர்களும் ஆச்ரயிகக, அவர்களை யெல்லாம் க்ருபை செயதருளிக்கொணடு எழுநதருளியிருந்து அரங்கேசாக்கு ஈடளிததுச் சாற்றி ஸம்மாணிதராய அநேக சேதநர்கள் அநு ஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படியாய். தத்வத்ரய வ்யாக்யாநம், ரஹஸ்யத்ரய வ்யாக்யாநம் ஸ்ரீவசனபூஷண வயாக்யாநம், ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யாநம், ஜ்ஞாநஸார ப்ரமேயஸார

---

[1] श्रीमद्रङ्गं जयतु परमंधाम तेजोनिधानं, भूमा तस्मिन्भवतु कुशली कोपि भूमासहायः। दिव्यं तस्मै दिशतु विभवं देशिको देशिकानां कालेकाले वरवरमुनिः कल्पयन्मङ्गलानि ॥

[2] "समुनिस्सौम्यजामाता सर्वेषामपि पश्यताम्।
श्रीसखस्यनिदेशेन शिश्रिये देशिक श्रिया ॥

[3] "ततस्समुत्सुकास्सर्वे शतशो थसहस्रशः

வ்யாக்யாநம், பெரியாழ்வார் திருமொழி வயாகயாநம், இராமாநுச நூற்றந்தாதி வ்யாக்யாநம், ஈட்டு ப்ரமாணத் திரட்டு, தத்வத்ரய ப்ரமாணத் திரட்டு, ஸ்ரீவசநபூஷண ப்ரமாணத் திரட்டு, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ப்ரபந்தம், யதிராஜ விம்சதி, திருவாராதந க்ரமம், கோபால விம்சதி, கமலாஸ்துதி, முதலாக அநேக ப்ரபந்தங்களையும் அருளிச் செயது வாழ்வித்தருளினார். இவர் திருவடிகளிலே ஆச்ரயித்த அநேகம் ஆயிரம் முதலிகளில பரதாநரா யிருக்குமவர்கள் —

(1) வானமாமலை ராமாநுஜ ஜீயர், (2) பட்டர்பிரான் ஜீயர், (3) திருவேஙகட ஜீயர், (4) கோயில் கந்தாடையண்ணன், (5) ப்ரதிவாதி பயஙகரம் அண்ணன், (6) எறும்பி அபபா, (7) அப்பிளளை, (8) அப்பிள்ளார இவ வெணமர்களும ஸவாமி பெரிய ஜீயருடைய அஷ்டதிக்கஜங்களாவாாகள இபபடி அநேகம சிஷ்யாகளுடன் தாசநததை வளர்ததுக் கொணடு எழுபததுமூன்று திருநக்ஷததிரம பெரிய பெருமாளுக்கு மங்களாசாஸநபரராய எழுநதருளி யிருந்து ஜகத்தை வாழவித்தருளினா இவா தீர்தத திவஸம் இருக்கும்படி என என்னில் —

[1] கும்பம் பாஸ்வதி யாதி தத்ஸுததிநே பக்ஷே வளர்க்ஷேதரே தவாதச்யாம் ச்ரவணர்க்ஷபாஜி ருதிரோத்கார்யாக்ய ஸம்வதஸரே | தீபக்த்யாதி குணாநவிதோ யதிவரா தீநாகிலாத்மஸ்தி ஸ்ரீ வைகுணட மகுண்ட வைபவமகாத காந்தோபயநதா முநி |

எனறிருககும

[1] कुंभं भास्वति याति तत्सुतर्दिने पक्षे वळक्षेतरे द्वादश्यां श्रवणर्क्षभाजि रुधिरोद्गार्याख्यसंवत्सरे। धीभक्त्यादिगुणान्वितो यतिवराधीनाखिलात्मस्थितिः श्रीवैकुण्ठमकुण्ठवैभव मगात्कान्तो-पयन्ता मुनिः ॥

வானமாமலை பெரிய ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி. ச்ரிய பதி யாய் ஸ்ரீவைகுண்ட நிலயனும் நித்ய முக்தாநு பாவ்யனுன ஸர்வேச்வரன், இருள்தரு மாஞாலமான இநத லீலா விபூதி யிலே "[1] ஈச்வரோஹ மஹம்போகீ" என்கிறபடியே அவனை இல்லை செயதும், [2] கிம் தேந நக்ருதம் பாபம் சோரேண ஆத்மா பஹாரிணா" என்கிறபடியே ஸர்வா நர்த்த மூலமான ஆத்மாபஹாரத்தைச் செய்தும், ஜந்ம ஜரா மரணங்களாலே, அபிபூதராய் க்ருத்யாக்ருத்ய விவேகமின் றியே ஸம்ஸரித்துத திரிந்துழல்கின்ற பதத சேதநர்களைக் கண்டு, தம்முடைய நாராயணத்வ ப்ரயுக்தமான குடற் றுடக்காலே, [3] "வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்ருசம் பவதி து கித:" என்கிறபடியே மிகுந்த துககத்தை யுடையனும் தயாபரவசனுய்த் தனது ஆஜஞாரூபஙகளான சருதி ஸ்ம்ருதீ திஹாஸ புராணுதிகளாலே நிஷ்கர்ஷிககப்பட்ட ஆத்ய மநூதித ஸ்வரூபோ பாய புருஷார்த்த ப்ரதிபாதக பத த்ர யார்த்த நிஷ்டையை ஸகல சேதநரு மறிநது உஜ்ஜீவிக் கைக்காக [4] "அஹம் சிஷ்யாச தாஸீச" எனகிறபடியே ப்ரதம சிஷ்யையான பெரிய பிராட்டியார் முகமாய ஸேனை முதலியாருக்கும் ப்ரபநநஜந கூடஸ்தரான ஆழ்வாருக்கும் க்ருபை செய்து அவ்வாழவார் முதலாக நாத, யாமுந, யதிவர, வரவரமுநி வரமங்கைமுநி, பர்யநதமாக ப்ரஸாதித்து தளிரத்து உஜ்வலமாம்படி குருபங்கதி ஹாரததை "பல தேவர்ககோர் கீழ்க்கன்றுய" எனறும் [5] "கலெள க சித் பவிஷ்யதி" எனறும், [6] "தச்சிஷ்யாக்ரஸரோ பரோ விஜ

---

[1] ईश्वरोहमहं भोगी ।

[2] किन्तेन नकृतं पापं चोरेणा त्मापहारिणा ।

[3] व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः ।

[4] अहं शिष्याच दासी च ।

[5] कलौ कश्चिद्भविष्यति ।

[6] तच्छिष्याग्रसरः ऽपरो विजयते रामानुजाख्यो मुनिः ॥

யதே ராமாநுஜாக்யோ முநி " என்றும் சொல்லுகிற படியே முதலிலும் நடுவிலும் கடையிலும் ராமாநுஜ ரத்னங்களாலே அலங்கரித்துப் பேணியருளினன்.

ச்ரிய பதி தொடங்கி மேன்மேலும் அபிவ்ருத்தமாய் வரவர முனிவன் வரை வந்துள்ள ஸத்ஸம்ப்ரதாயம் வான மாமலை ராமானுஜ ஜீயரிடத்தும் அவர் அஷ்ட திசாகஜங்க ளிடத்தும் அநத வானமாமலை ஜீயர் தொடங்கி இனறுவரை அவிச்சின்னமாய் வருகிற அவா பரம்பரையிலுமம வயவஸ் திதமாய் ஏகரூபமாய் நடந்து வருவது எல்லோராலும் அறி யப்பட்டதேயாகும்.

எம்பெருமானுர், வரவரமுனி இவர்களின் வைபவங் களை குருபரம்பரா பரபாவமும் யதீநதர ப்ரவண ப்ரபாவ மும், நாம் நன்கு அறிந்துகொள்ளும்படி அவற்றைப் பரக்கப் பேசுவது போலவே, இவவரமங்கை முனிவன் வைபவங்களை யும் நாம் எல்லோரும் நன்கு உணர்ந்து உஜ்ஜீவிக்கும் வண்ணம் அவர் ஸந்நிஹித காலத்தவரால எழுதி வைக்கப் பட்டுளள ககநகிரி முநிசரிதம் முதலிய க்ரந்தங்கள் பரக் கப் பேசியிருப்பதைக் காணலாம்.

பூர்வாசார்யர்களுடைய உக்திய நுஷ்டானங்களைத் தமது அநுஷ்டாநங்களாலே ப்ரகாசிப்பித்துக் கொண்டு போரும் வானமாமலை ராமானுஜ ஜீயருடைய ஓராண்வழி ஸம்ப்ரதாயஙகளை உஜ்வலமாக்கும் அவர் ப்ரபாவங்கள் பல. அவைதான் அவதாரத்வம், ஆசார்யதவம் முதலியனவாகும். இவை யதீநத்ர ப்ரவண ப்ரபாவத்திலே எம்பெருமான் களாலும் வரவர முனிவராலும் ஸூசிப்பிக்கப்பட்டும், வாசிகமாக அறிவிக்கப்பட்டும் இருப்பதை நாம் நன்கு காணலாம். இவற்றை விசதமாகவும் விஸ்த்ருதமாகவும் முதலில் வெளியிட்ட ப்ரபந்தம் ககநகிரி முநி சரிதமாகும்.

இங்குச சிலர், ககநகிரி முநி சரிதம் முதலிய ப்ரபந்தங் கள் ப்ரசஸ்த பரமாணமாகமாட்டா, ஸர்வ ஸம்மதமான

தன்றோ ப்ரசஸ்த ப்ரமாணமாகும். வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸம்பந்திகளே உத்தேசயமாகக் கொள்ளும் இப் பிரபந்தங்கள ப்ரசஸ்தங்கள் எனபது எங்ஙனே ? எனச் சங்கிக்கக்கூடும். அதுசரியன்று. அப்படியே கொள்ளவேணு மென்று அபிபிராயமாகில் "கலியுங்கெடும் கண்டுகொள் மின்" [1]"கலௌ க சித் பவிஷ்யதி" என்று கூறும் பரமாணங்களையும் மநுஷ்ய ஜன்மாக்களில பலர் ஒப்பவில்லையே- [2]"ஜகத் ரக்ஷாபரோ நந்தோ பவிஷ்யதபரோ முநி" என் பதையும் நம்மிராமாநுஜ ஸித்தாந்தத்தைச சார்ந்தவர்களி லும் சிலர் அங்கீகரிக்கவில்லையே. எனவே உடையவரும் அவதாரமில்லை, மாமுனிகளும் அவதாரமன்று என் றல்லவோ சொல்லவேண்டி வரும் நிற்க நமது ஆசாரா நுஷ்டானங்களும் ஸாவாப்யுபகத மில்லாமையால அபர மாணமாகுமே. எனவே, முடிவாக இத்தகையோர் வேதங் களையும் ஆழ்வார்களையும ஆசார்யர்களையும் ஈச்வரனையும் இல்லை செய்து ஸமஸாரத்தில ஆழ்ந்தமிழ்ந்தவே நேரிடும். ஆகையால் பரமாணமாவது—சருதிஸ்ம்ருதீதி ஹாஸபுரா ணங்களும் "யதயதாசரதி சரேஷ்ட:" என்ற சரேஷ்ட ஸமாசாரங்களும அத்தகைய ஆசாரவானகளுடைய வசன முமேயாகும். இந்த வசனங்களுக்கு பராசஸ்தயமாவது ப்ராஜ்ஞ ஆதரமும் இதர ப்ரமாணா நுஸரணமுமேயாகும். இந்த ககநகிரி முநிசரிதமும பராஜ்ஞராலேயே செயயப பட்டதும் இதர பரமாணா நுஸாரியுமான க்ரந்தமாகும்

யதீந்த்ர பரவண ப்ரபாவம செயதருளிய பிள்ளை லோகம் ஜீயர் காலத்திற்கு சிறிது பிற்காலத்தில ஸ்ரீவான மாமலை ராமானுஜ ஜீயரின அஷ்டதிக்கஜங்களில் ப்ரதான ராய எம்பெருமானாருக்கு திருக்குருகைபபிரான பிள்ளா னைபபோலே ஜீயரால் ஞானபுத்ரனாக அபிமானிககபபெற்ற

---

[1] कलौ कश्चिद्भविष्यति ।

[2] जगद्रक्षापरोनन्तो भविष्यत्यपरोमुनि ।

ராமானுஜன் பிள்ளைக்கு [1] "ஆத்தானி தீஹ விதிதோ வரதார்ய சர்மா காரீந்த்ரஸூநு க்ருதிஸாகர பூர்ண சந்த்ர |" என்கிறபடியே பகவத்விஷயம் வரதார்யரென்றும் ஆத்தானென்றும் ப்ரஸித்திபெற்ற குமாரா அவதரித்தார். அவருக்கு—[2] "யஸ்யாபூத் தநயோ லோகேவிதிதஸ் ஸுந்த ராஹ்வய,| யதாத்மநா வதீர்ணௌஸௌ வாநசைலேச ஸுந்தர ||" என்றும் [3] "யச்சிஷ்யபாவ மநவாப்ய சடாரி வேதபாவம ப்ரபோத்து மநலம் பஹுசாஸ்த்ரவித்பி:| ஸோயம் ஹி ஸுந்தரகுரு விஜயத்வஜோ பூத் ஸித்தாந்த ஸீம்நி யதிராஜகுரோர் மஹாத்மா||" என்றும் சொல்லுகிறபடியே வானமாமலைப் பெருமாள் அவதார விசேஷமென்றும் பகவத்விஷய ஸூக்ஷ்ம தாத்பர்ய வேத்தாவென்றும் ராமானுஜ ஸித்தாந்த நிர்வாஹகரென்றும் சாஸ்த்ரஜ்ஞாகளாலும் கொண்டாடப்பட்ட சுந்தரார்யர் என்னுமவர் குமாரராக அவதரித்தார அந்த ஸுந்தரார்யரை அழைத்து தத்காலத்தில் வானமாமலை ஆஸ்தானத்தை அலங்கரித்த ராமானுஜ ஜீயர் ககநகிரி முனிவர் விஷயமான பூர்வீக லேகநங்களையும பூர்வாகளின் ஐதிஹ்யரூப வசனங்களையும் யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம் முதலியவற்றையும்

[1] आत्तानितीह विदितो वरदार्यशर्मा कारीन्द्रसूनुकृति सागरपूर्णचन्द्रः ।

[2] यस्याभूत्तनयो लोके विदित स्सुन्दराह्वयः ।
यदात्मना ऽवतीर्णोसौ वानशैलेशसुन्दरः ॥

[3] यच्छिष्यभाव मनवाप्य शठारिवेद
भावंप्रबोद्धुमनलं बहुशास्त्रविद्भिः ।
सोयंहि सुन्दरगुरु र्विजयध्वजोभूत्—
सिद्धान्तसीम्नि यतिराजगुरोर्महात्मा ।

ப்ரமாணமாகக் கொண்டு ஸம்ஸ்க்ருத பாஷையில் பத்யரூப மாய அவா விஷயமாய் ஒரு க்ரநதம் செயயும்படி நியமித் தருளினர். அவரும ஸ்வாமி நியோகத்தை சிரஸா வஹித்துச் சிநதிததுக்கொண்டிருக்க, அன்று ராத்திரியிலே ஸ்வப்நத் தில, தெயவநாயகன் எழுந்தருளி, ககநகிரி முநிவரின் சரித் ரத்தை ஸவிஸ்தரமாய எழுதும்; அதைத் தலைகட்டுவது நாமன்றே, உமகெனன பரம், நீர் சிநதிக்கவேண்டா'' எனறு நியமிக்க, அவரும் கணவிழித்து ஸ்வப்ந விசேஷம் இருநதபடி என் எனறு விஸ்மிதராய ஜீயர் ஸ்வாமியிடம் ஸ்வப்ந வ்ருத்தாநதையும் தெரிவிதது மிகவும் ஸந்துஷ்ட ராய் இந்த ககநகிரிமுநி சரிததை அருளிச் செய்தார். எனவே இசசரிதம் பகவத் பரிகருஹீதமும் ஆசார்யருசி பரிக்ருஹீதமும் சிஷ்டபரிக்ருஹீதமுமாய இருக்கும்.

மேலும் ஒரு பெரியோரின் வைபவத்தைக் கூறுமவர் அவர் ஸமபநதம் பெற்றிருந்தாலொழிய அதை முற்றிலும் கூற முடியாது இதை யதீந்த்ர ப்ரவண பரபாவம் குரு பரம்பரா ப்ரபாவம் முதலிய க்ரநத கர்த்தாக்களிடமும் காணலாம் ஸம்பநதமிலலாத அங்யர்கள் வைபவங்களையு மறியார், அறிந்தாலும் அதை க்ரந்த ரூபமாய்ச் செய்யவும் முன்வரமாட்டார்கள் எனவே இந்த ககநகிரிமுநி சரித மருளிச் செயதவரும் அநத ஸ்வாமியின் சிஷ்ய பரம்பரை யைச் சார்ந்தவராய் ப்ராஜ்ஞராய அந்தரங்கராய் ஸமீப காலஸ்தராய ஆசார்ய பதம் நிர்வஹித்துப் போருமவராய் இருக்கையாலே இவருடைய க்ரந்தம் ப்ரசஸ்ததம ப்ரமாண மென்னத் தட்டில்லை. இப்படி ஒப்புக் கொள்ளாதவர்கள் பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிச் செயத குருபரம் பரா ப்ரபாவத்திற்கும் பிள்ளை லோகம்ஜீயர் அருளிச்செய்த யதீந்தர ப்ரவண ப்ரபாவததிற்கும் ப்ராமாண்யத்தை ஸமர்த்திக்க முடியாததோடு தங்கள் குல வைபவங்களை யும் குருகுல வைபவங்களையும் ப்ரகாசிப்பிக்கும் ப்ரமாணங்

களையும் இல்லை செய்து நாஸ்திகா க்ரேஸரராகத் தேறுவர் என்னத் தட்டில்லை.

மேலும் [1] "சிஷ்யாசார்ய தநுத்வயீம்......ராமாநுஜாக்யோமுநி" என்றும், [2] "ஸ்ரீராமாநுஜ யோகிந, ப்ரதிநிதிர் வாநாத்ரியோகீசவர" என்றும், [3] "பக்த்யா நமந்சிந்தயே" என்றும் மஹாராயா முதலியோர் கூறிய வசனங்களோடு ஸமவாதியான [4] "ஆஸ்திகம தைஷ்டிகம்" என்றும், [5] "ரம்யோபயந்த்ரம்சக" என்னு மித்யாதி வாக்யங்கள் [6] "ஸ்வப்நே ப்ருஹத்ய தீந்த்ரஸ்ய...... ஸ்வர்ணாதிபத ஸம்ஜ்ஞக" என்பன போன்ற யதீந்த்ர ப்ரவணப்ரபாவத்தில் சொல்லப்படுகிற அர்த்தங்களையே உட்கொண்டு பேசிற்றே பேசுவனவாகையால் ககநகிரி முநி சரித்ததின் ப்ராசஸ்த்யத்திற்குக் குறையில்லை

இனி இவ்வாறு ப்ரசஸ்தங்களான [7] "ஆஸ்திகம் தைஷ்டிகம் தத்ர மத்யமம் தநயம். ...ஸ்ரீ ஸௌம்ய வரதாபிதம், [8] "ரக்தாக்ஷ்யாஹ்வய வத்ஸரே.... ரம்யோபயந்த்ரம்சக [9] "ஸ்ரீமத் காரிகுமார..... கலப்தேஜ்ய வம்ச்ய ஸுத" என்னும் ககநகிரி முநிசரித வசனங்கள

---

[1] शिष्याचार्यतनुद्वयीं . . . रामानुजाख्योमुनि. ।

[2] श्रीरामानुजयोगिनः प्रतिनिधि र्वानाद्रियोगीश्वरः ।

[3] भक्त्या नमन्चिन्तये । [4] आस्तिकं दैष्टिकं ।

[5] रम्योपयन्त्रंशकः ।

[6] स्वप्ने बृहद्यतीन्द्रस्य . . . स्वर्णादिपद संज्ञकः ।

[7] आस्तिकं दैष्टिकन्तत्र मध्यमंतनयं . . . श्रीसौम्य वरदाभिधं ।

[8] रक्ताक्ष्याह्वयवत्सरे . . . रम्योपयन्तांशकः ।

[9] श्रीमत्कारिकुमार . . . कृतेज्य वंश्य स्सुतः ।

[1]" ஸிஷ்யாசார்யதநு த்வயீம்... ..ராமாநுஜாக்யோ முநி:"। [2]" ஸ்ரீ ராமாநுஜ யோகிந ப்ரதிநிதிர் வாநாத்ரி யோகீச்வர [3]" ஸ்வப்நே ப்ருஹத்யதீந்த்ரஸ்ய .....ஸ்வர்ணாதி பதஸம்ஜ்ஞக:" என்பவை முதலிய ஆப்ததம பூர்வ வசனங்களோடும் யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்தோடும் ஐககண்ட்யத்தைப பெற்று ப்ரபலதமமாய [4]" ஜகத்ரக்ஷாபரோ நந்தோ பவிஷ்யத்ய பரோ முநி " என்கிறபடியே அநந்தாழ்வானுடைய புநரவதாரமான மணவாள மாமுனிகள் ஆசார்ய ரூபியாயும் வானமாமலை ஜீயர் சிஷ்யராயும் இப்படி ஏககாலத்திலே மணவாள மாமுனிகளே ஆசார்ய சிஷ்ய ரூபேண அவதரித்தார் என்பதை ஸாதித்துத் தருவதுமாகும்.

"ஸ்வப்நேப்ருஹத் யதீந்த்ரஸ்ய" என்கிறவசனம் வானமாமலை ஜீயரின அவதாரத்வே எப்படி ப்ரமாணமாகும் என்னில், பெரிய பெருமாள் கந்தாடை யண்ணனுக்கு பெரிய ஜீயர் திருவடிகளில் ப்ராவண்ய முண்டாக்குகைக்கு அவா ஸ்வப்நத்திலே இராமாநுசனும் இராமாநுஜாம்சமான முதலியாண்டானுமாய் ஆசார்ய சிஷ்யர்களாய் ஸேவை ஸாதித்தாப்போலே திருவேங்கட முடையானும் பெரிய கேள்வி ஜீயர் ஸ்வப்நத்திலே மணவாள மாமுனிகளும் வானமாமலை ராமாநுஜ ஜீயரும் ஆசார்ய சிஷ்யாவதாரம் என்று காட்டுகைக்காகவே திருமலை மேலைக் கோடி தொடங்கி கீழக் கோடி முடிய நீண்ட பெரிய திருமேனியோடு தெற்கு நோக்கி ஒருவர் சயனித்துக்கொண்டிருப்பதாயும், அவர் திருப்பாதத்தருகே த்ரிதண்ட காஷாயதாரியாய் ஒருவர் நின்று கொண்டிருப்பதாயும், அங்கு சமீபத்தில்

[1] शिष्याचार्यतनुद्वयीं . . . रामानुजाख्यो मुनिः ।

[2] श्रीरामानुजयोगेनः प्रतिनिधि र्वानाद्रियोगीश्वरः ।

[3] स्वप्ने बृहद्यतीन्द्रस्य स्वर्णादिपदसंज्ञकः ।

[4] जगद्रक्षापरोनन्तो भविष्यत्यपरो मुनिः ।

போக்கு வரத்துள்ளவர்களை இவர்கள் யாவர் எனக் கேட்க "கீழே சயனித்து இருப்பவர் முப்பத்தாறுயிரப் பெருக்கரான அழகிய மணவாளப பெருமாள் நாயனார் என்றும், நிற்பவர் அவர் சிஷ்யரான பொன்னடிக்கால ஜீயர்" என்றும் சொலலக் கேட்டு ப்ரபுத்தராய "இதொரு ஸ்வப்நமிருந்தபடி என" என்று விஸ்மயப்படும்படி செய்தது, இவர்களிருவரும் ஓருருவமே ஈருருவமாகிய ஆசார்ய சிஷ்யாவதாரம் என்பதை அறிவிக்கைக்காகவே எனவே அஹிபதி புநரவதாரமான மாமுனிகளும் ராமானுஜ ஜீயரும் நாராயணனும் நரனும் போலே ஓருருவே ஈருருவமென்னத் தட்டில்லை.

மற்றையோருக்கு [1]ருசிர ஜாமாத்ரு யோகீந்த்ர பாதாச்ரயம" என்று மாமுனிகளின் திருவடிகளி லாச்ரயித்த பின்பு விலக்ஷண ஸம்பந்தம் தோற்றுமாப் போலன்றிக்கே [2]"பாதரேகா மயம் ஸதா" என்கிறபடி மாமுனிகளின் க்ருபையாலே அவதரித்த தனியனே "ஸதா" என்று பூத பவிஷ்யத் வாத்தமானங்களான முக்காலத்திலும் பிரியாத அவயவபூதா வானமாமலை ராமானுஜ ஜீயர் எனச் சொல்லுகையாலே "பெரிய ஜீயருடைய அம்சாவதாரமே, வானமாமலை ஜீயா" எனனுமதுக்கு இது போரச சேர்நதிருக்கும்.

இந்த வாநாத்ரி லக்ஷ்மண முநியும் அரண்ய வாஸத்தோடு அயோத்யா வாஸத்தோடு வாசியறத தொடர்ந்தடிமசெயது [3]"லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந" எனறிருக்கு மவரைப்போலவே வரவர முனிகளின் ஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்தடிமை செய்யுமவராய அவதார விசேஷமாயு மிருப்பர்.

---

1. रुचिरजामातृयोगीन्द्र पादाश्रयम् ।

2 पादरेखामयं सदा । 3 लक्ष्मणो लक्ष्मिसंपन्नः ।

இந்த ராமானுஜ முனிவரின் அவதாரம் வெகு காலத்திற்கு முன்னரே திருவேங்கடவன் திருமார்பகத்துறையும் அலர்மேல் மங்கையாலும ஸூசிதமாயிருக்கும் எங்ஙனே என்னில்? வானமாமலை ஜீயர் சிலகாலம் திருமலையில் எழுந்தருளியிருந்து பிறகு சீவரமங்கைக்கு எழுந்தருள உத்யோகித்த பொழுது [1]"ஸ்வப்நே ததாஸ்யாங்ககதா ஸமாநவர்ணா | தாதேதி ஸம்போத்ய ... நயஸ்வேத்யவதத புரந்த||" என்று நாய்ச்சியார் இவரது ஸ்வப்நததிலே, "அப்பா, என்னை உமது ஊருக்கு அழைததுப் போம்" என்று ஒரு பெண் வடிவு கொண்டு மடியிலிருந்து நியமிததருளி அப்படியே பெரிய கேள்வி ஜீயர் ஸ்தலததார்கள் முதலானவர்களின் ஸ்வபநத்திலும் "எங்கள் ஐயரான வானமாமலை ராமானுஜ ஜீயருடன் கூட என்னை வானமாமலைக்கு அனுப்புங்கோள" என்று நியமிக்க அவாகளும் வானமாமலை ஜீயா ஸந்நிதிக்கு வநது [2]"ஸ்ரீ வேங்கடேசாய புரா .... யேசவரீ| நிவாரிதா சேஷகிரீச ... ஸுப்ரதிஷ்டா||" என்கிறபடியே திருவேஙகட முடையானுககாகத தனிக்கோவில் நாயச்சியாா அவதரிபபிககபபட்டு பரதிஷ்டிபபிக்கப்பட்டதாயும் திருவேஙகட முடையானுக்குத் திருக்கல்யாணம் செயயப்புககவாறே அவன திருமார்வில் நாய்ச்சியார் வருங்காலத்தில் நிகழப்போகும் இநத வ்ருத்தாநதத்தைச் சிநதித்தே தனிக்கோவிலும் திருக்கல்யாணமும் வேண்டாமென்று நியமித்தபடியால அவை யிரணடுமின்றி ஸுபூஜிதையா யிருப்பதாயும், அந்த நாயச்சியார் திரு

[1] स्वप्ने तदास्याङ्कगता . . . समानवर्णा ।
तातेति संबोध्य . . . नयस्वेत्यवदत्पुरन्ते ॥

[2] श्रीवेङ्कटेशाय पुरा . . लयेश्वरी ।
निवारिता शेषगिरीश . . . सुप्रतिष्ठा ॥

வுள்ளம் தேவரீா தமக்குப் பிதாவென்றும் தெயவநாயகன் பர்த்தா வென்று மிருப்பதால், தேவரீர் நாயசசியாரை எழுந்தருளப் பண்ணிக்கொணடு போகவேண்டு மென்று ப்ரார்த்தித்தார்கள். பினபு ஜீயரும் அபபடியே எழுநதருளப் பண்ணிப்போய் அந்த நாயசசியாருக்கு தெய்வ நாயகனோடு திருக்கலயாண மஹோத்ஸவம் செய்து வைத்தார் என்பது இன்றளவும எல்லோராலும் ஒபபுக்கொளளப்படும அபாதிதமான வருததாநதம்

இந்தச் சீவரமங்கை நாயச்சியாா வருத்தாநதத்தால் திருமலை அலர்மேல் மஙகை நாயசசியார் நிஷேதிததும் வானமாமலை ராமானுஜ ஜீயர் அவதரித்து அந்த நாயச்சியாருக்கும் தெயவநாயகனுக்கும் திருக்கலயாணம் நடததப் போகிறுர் எனபதை ஸாவஜ்ஞையான தான் உணர்நதமையாலே யாகும். அங்ஙனன்றியே கொண்டால் [1]"யாபிஸ்தவம் ஸ்தநபாஹு த்ருஷ்டிபிரிவ ஸ்வாபி பரியம் ச்லாகஸே" என்னபபடுமவளுககு பதநயாநதராவதாரததிலே நிஷேதம் தான் கூடுவது எங்ஙனே? நிற்க ஸர்வஜ்ஞையான அலர்மேல்மங்கை இந்த நாயசசியாரை அவதரிக்கச் செய்யும் போதும் பிரதிஷ்டை செயவித்தபோதும் நிஷேதியாமல் திருக்கல்யாணத்தையே நிஷேதித்தமையாலே அவள் திருவுள்ளம் ராமானுஜ ஜீயர் அவதாரததை எதிர்நோக்கியதே என்பது தன்னடையே தேறும் பொருளாகும்.

மேலும் "செய்த வேள்வியர் வையத்தேவர்" என்று ஆழ்வார் கொண்டாடும்படியான யோகிகளின் குலங்களிலே ஈச்வரன் தானே ஆசார்ய ரூபமாக அவதரிப்பன் எனபதற்கு அவன் வாக்யமே ப்ரமாணமாகும்—அதாவது [2]"அஹ

1 याभिस्त्वं स्तनबाहुदृष्टिभिरिव स्वाभिः प्रियं श्लाघसे ।

2 अहमाचार्य रूपेण भविष्यामि युगेयुगे ।
तत्रापि योगिनां पुंसां कुलेमहति जन्म मे ॥

மாசார்ய ரூபேண பவிஷ்யாமி யுகேயுகே| தத்ராபி யோகி நாம் பும்ஸாம் குலே மஹதி ஜந்ம மே|| [1]விசிஷ்ய மே தேவி கலௌயுகே குரோ ஜநிர் பவித்ரீகலு ஸத்குலே மம|| த்ரிதண்ட காஷாய படோர்த்வ புண்ட்ரத்ருக் பவிஷ்யதீ ஸாஹி புஜிஷ்யபூயஸீ|[2] மதபக்தா ஞாநபூர்ணா யே பவிஷ்யந்தி கலௌ யுகே|| த்ரிதண்டிநோ பிமாநாந் மே ஸர்வே தே குருரூபிண| முக்தி பாஜோ பவிஷ்யந்தி ஸத்யோஹம் ப்ரப்ரவீமி தே||" என்னுமிவை முதலியனவாகும் இவற்றால் கலி காலத்தில விசேஷித்து த்ரிதண்ட காஷாய தாரியான ஆசார்யாவதாரம் உணடென்றும், அவ்வாசார்யா பிமானத்தாலே பக்திமான்கள் முக்தியடையப் போகிறார்களென்றும் கூறப்பட்டதாகும். இவை எம்பெருமானார் அவதாரத்தைக் குறிப்பிடும் ப்ரமாணங்கள்* என்னும் விஷயத்தில விப்ரதிபத்தி பண்ணுவார் ஒருவருமில்லை. ஆயினும் இவற்றை உற்று நோக்கின, விசிஷ்ய என்றதனால அவதாரத்தின அதவிதீயதவமும் அதன் பாஹுள்யமும் கூறியதாயக் கொளளவேணும்.

நிற்க "விசிஷ்யமே தேவி" என்ற ஸ்ரீ சாஸ்த்ரத்தைத தொடர்ந்து கூறப்பட்ட[3] "மதகாலாதநு பதமாக்ஷி

---

1 विशिष्य मे देवि कलौ युगे गुरोर्जनिर्भवित्री खलु सत्कुले मम।
त्रिदण्डकाषायपटोर्द्ध्वपुण्ड्र धृग्भविष्यती
साहि भुजिष्यभूयसी।

2 मद्भक्ता ज्ञानपूर्णा ये भविष्यन्ति कलौ युगे।
त्रिदण्डिनोऽभिमानान्मे सर्वे ते गुरुरूपिणः।
मुक्तिभाजो भविष्यन्ति सद्योऽहं प्रब्रवीमि ते।

3 मत्कालादनु पद्माक्षि समयो लोपमेष्यति।
गुरुरूपस्य मे शक्तिं तत्र तत्र निधायवै।
समयं सङ्ग्रहीष्यामि नातिलोपो भविष्यति॥

ஸமயோ லோப மேஷ்யதி| குருரூபஸ்ய மே சக்திம் தத்ர தத்ர நிதாய வை| ஸமயம் ஸங்க்ருஹீஷ்யாமி நாதிலோபோ பவிஷ்யதி|" இதயாதி வாக்யத்தையும் [1]"ஜகத் ரக்ஷா பரோநந்த", "ஆதியிலே அரவரசை அழைதது" என்றும், [2]"சிஷ்யாசார்ய தநுத்வயீம்", [3] "ஆஸ்திகம் நைஷ்டிகம்" என்றும் இத்யாதி வாகயங்களையும், [4]"அஹம் ஆசாராயரூபேண பவிஷ்யாமி" என்கிற வாக்யத்தோடு சேர ஜககண்டயம் செயது அர்தத விசாரம் செய்யும் போது, உடையவா மணவாள மாமுனிகள் வானமாமலை ஜீயர் பர்யநதமான அவதார பஹுத்வத்தை உட்கொண்டே இந்த வசனம் பரவருத்தமாயிறறு என்கையே ஸ்வரஸ ஸித்தமாகும். அபபடியின்றியே [5]"த்ரிதணடகாஷாய", [6]"த்ரிதணடிநோ பிமாநாந் மே" என்னும் வசனங்கள் எம்பெருமானார் ஒருவரையும் தான் கூறுவனவாகும்" எனக் கொள்ளில் கீழக் கூறிய "ஜகத் ரக்ஷாபரோ நநத" இத்யாதி வசனங்களுக்கு அபராமாணயம் வரும் எனவே [7]"மத்காலாதநு" என்ற இடத்திற்கு உடையவா அவதாரததின் கடைநிலையான வானமாமலை ஜீயர் காலத்திற்கு பினபு என அாததம் கொணடு அதனபிறகே ஆசார்யர்களிடம் சக்தயாவேசம் எனக கொள்ளத தகும். உடையவர் அவதாரததிற்குப் பிறகு சக்த்யாவேசம் எனக் கொணடால் அதற்குப் பின்புள்ள எம்பாரை ஸுதர்சநாம்ச மெனறும், ஸ்ரீ பராசர பட்டரை ஸ்ரீ ரங்கநாதாம்சமென்றும் பிள்ளை லோகாசார்யரை தேவபபெருமாள் அம்சம் என்றும் கூறும் வசனங்களெல்லாம் வயாஹதங்களாம் உடையவருககுப் பிறகு மணவாள மாமுனிகள, வானமாமலை ஜீயர் பர்யந்த

---

1 जगद्रक्षापरोनन्तः 2 शिष्याचार्यतनुद्वयीं ।
3 आस्तिकं नैष्ठिकं । 4 अहमाचार्यरूपेण भविष्यामि ।
5 त्रिदण्डकाषाय । 6 त्रिदण्डिनोभिमानान्मे ।
7 मत्कालादनु ।

மாக விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயமானது மேல்மேலெனப் பலவகையிலும் செழித்துத் தழைத்து வந்திருக்க "மத்காலாநு" என்பதற்கு உடையவராகிய எனது அவதாரத்திற்குப் பிறகு ஸமயம் லோபமடையப் போகிறது" என்று அர்த்தம் கூறுவதும் ப்ரத்யக்ஷ விருத்தமாகும். உடையவர் அவதாரத்திற்குப் பிறகு எத்தனை மஹான்கள் அவதரித்து க்ரந்தங்கள் மூலமாகவும் ப்ரவசன மூலமாகவும் விசிஷ்டாத்வைத ஸமயத்தைப பேணியிருக்கிறார்கள் எனபதை அறியாதாரும் உண்டோ? எனவே "ஜகத்ரக்ஷா பரோநந்த." "ஆதியிலே அரவரசை" இத்யாதிகளான வசனங்களாலே யதிவர புநரவதாரமான மாமுனிகள் திருவநந்தாழ்வானுடைய பூர்ணாவதாரமென்றும் "ரம்யோபயந்த்ரம் சக", "சிஷ்யாசார்ய தநுத்வயீம்", "பாதரேகாமயம்" இத்யாதி வசனங்களாலே அம் மாமுனிகளின் அம்சாவதாரம் வானமாமலை ஜீயர் என்றும், ஒரொன்று பூர்ணாவதாரமாகவும் ஒரொன்று அமசாவதாரமாகவும் முறையிடுகிற ப்ரமாணங்களைக் கொண்டு நிர்ணயிப்பதே ஸாத்விக ஸம்மதமாகும். அதில் எமபெருமானாருக்குப் பின்பு எம்பார்முதல் திருவாய்மொழிப் பிள்ளை ஈறாக உள்ள ஓராண் வழி ஆசார்யர்களின் அம்சாவதாரதவத்தில் தனித தனி ப்ரமாண முண்டாகையால அவைகளினால் அவர்கள் அவதார விசேஷமென்பது தேறுமாகையால் "விசிஷ்யமேதேவி" இதயாதி ஸ்ரீ சாஸ்த்ர வசனங்களாலே சொல்லப்பட்ட அவதாரம் மணவாள மாமுனிகள் வானமாமலை ஜீயர் பர்யந்தமா யிருக்குமென்பதும் ஸித்தம். ஸ்ரீ சாஸ்த்ரத்தில் "விசிஷ்ய" என்று கூறிய பதத்தின தாதபர்யநதான் தத விவரணமான "ஜகத்ரக்ஷா பரோநநத" "ஆதியிலே அரவரசை" "சிஷ்யாசார்ய தநுத்வயீம", "ரம்யோபயந்த்ரம்சக", "ஸ்வப்நே ப்ருஹத்ய நிந்த்ரஸ்ய" என்று மித்யாதி வசனங்களிலே வ்யாக்யானம் செய்யப்பட்டது என்பது அபலபிக்க முடியாத ஸித்தாந்தமாகும்.

எனவே உடையவர் அவதாரம், தத்புநரவதாரம், தச்சிஷ்யாவதாரம் என்னும் க்ரமத்திலே உடையவர் அவதாரத்தின் கடைநிலை வானமாமலை ஜீயரென்பதும் அதுபர்யந்தம் அம்சாவதாரமென்றும் அதற்குப் பின்பு வந்துள்ள ஆசார்யர்களிடம் சக்த்யாவேசம் என்பதும் ஸித்தமான அம்சமாகும்.

இனி கீழ்க்கூறியபடி வானமாமலை ஜீயருக்குப் பிறகு ஆசார்யாகளிடம் பகவான் செய்யும் சக்தயாவேசமும், இந்த ஜீயருடைய பரம்பரையில் பினஞுடி வரும் ஆசார்யர்களிடமே எனபது நிபுண நிரூபணம் பண்ணுமவர்களுக்கு வ்யக்தம். எங்ஙனே என்னில்? "குருரூபஸ்ய மே சக்திம் தத்ரதத்ர நிதாயவை" என்ற வசனத்திற்கு த்ரிதண்ட காஷாயதாரியாய குருவின் உருவம் தரித்த எனது சக்தியை (தத்ரதத்ர) அந்தந்த (உருவம்) த்ரிதணடகாஷாயாதிதாரிகளான ஆசார்யர்களிடத்திலே வைத்து ஸமயம் அதிக லோபத்தை யடையாமல் பாதுகாக்கப் போகிறேன் என்றே பகவத் வசனமாகையால் அந்தப் பரமபரையில வரும் ஜீயர்களிடம் சக்யாவேசமென்பதும் மறைக்கக்கூடாததாகும். "தத்ர தத்ர" என்பதற்கு இவ்வாறு அர்த்தம் கூறுவதே ஸ்வரஸமாகும். மேலும் ஒரே கார்யார்த்தமாய ஒரே காலத்தில் அநேகரிடம் சக்த்யாவேசம் அப்ரயோஜகமாகையாலே இந்தப் பரம்பரையிலே பரம்பரையாய் வந்துள்ள யதித் தலைவர்களிடமே சக்த்யாவேசமென்பதும் தன்னடையே கிடைக்கக்கூடியதாகும். இவ்வர்த்தைத்தான் ஈச்வரனும் "மத்கடாக்ஷாபவேத் யஸ்ய மயிவா ப்ரணதோஹ்ய|: தஸ்ய தஸ்ய ஹ்ருதிஸ்தோயம் பவிஷ்யதி நஸம்சய:||" என்று இப்படிப்பட்ட ஆசார்ய ரஹஸ்யங்கள் ஆசார்யனை எனது பூர்ண கடாக்ஷம் பெற்றவர்களுக்கே நெஞ்சில் படும். மற்றையோருக்குப் படாது என அருளிச்செயதான்

இனி இவரது ஆசார்யத்வம் ஆராயப்படுகிறது. தேவப் பெருமாள் ஸந்நிதியில் உடையவர் ஸந்யஸித்து ராமானுஜ முனி என்று அவரால் திருநாமம் சாற்றப்பெற்றுப் போலவே, அழகிய வரதரும் "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று ஆழ்வார் சரணம் புகுந்த வானமாமலைப் பெருமாள் திருமுன்பே, ஸந்யஸித்து ஸேவித்து நிற்க, "ஸ்ரீமத் வாநமஹாசைல ராமாநுஜ மஹாமுநே| இத்யா மந்த்ர்யாகரோந் நாம முநேரஸ்ய மஹாத்மந:" என்கிறபடியே பெருமாள் ராமானுஜ மஹா முனி என்று திருநாமம் சாத்திப் பெரிய பிராட்டியாரோடு சிந்தித்துத் தன் சோதிவாய் திறந்து "ஸ்ரீரங்கே யதிராஜ வத| ஸ்வதாமநி ஸர்வநிர்வாஹம குருஷ்வெ - த்யநவசாத் ததா" என்கிறபடியே கோயிலிலே நம்மிராமானுச முனி போலே நீர் நம் படைவீட்டில கார்யங்களை யெல்லாம் நிர்வஹித்துப் போரும் என்று நியமித்தும், அங்குள்ள தம் ஸந்நிதி பரிகரங்களையும் மற்றும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் அருளப்பாடிட்டு "முநிம் பஜத்வ மாசார்யம் ப்ரிய மதயா த்தமேவமே" என்கிறபடியே "எனக்கு மிகுந்த ப்ரீதி பாத்திரமான இந்த ராமானுஜ முநியை எல்லோரும் ஆசார்யனாய் அடைந்து உஜ்ஜீவியுங்கோள்" என்றும் இவர் ஆசார்யத்வத்தை நியமித்து வெளியிட்டருளினார்

ஆனால் இவருக்கு ராமானுஜமுநி என்று திருநாமம் இடக் காரணம் என்? என்னில் இவர் ராமானுஜ முநிவரின் ஜ்ஞான ஸந்ததியில் திருப்பேரனாராய் அவதரிக்கையாலே பிதாமஹனுடைய திருநாமத்தைப் பௌத்ரனுக்குச் சாற்று வது ஸதஸம்ப்ரதாய ப்ராப்த மாகையாலேயாகும். உடைய வரே மாமுனிகளாயும் அவரம்சமே வானமாமலை முனிவ ராயும் அவதரிக்கையாலே இவர் திருப்பேரனார் என்னத் தட்டில்லை.) நிற்க மணவாளமாமுனிகளும் எம்பெருமா னாரைக் குறித்து "தந்தை நற்றாய் தாரம் தனயர் பெருஞ் செல்வம் என்தனக்கு நீயே எதிராசா" என்றும், "தன்

புதல்வன் கூடாமல் தான்புசிக்கும் போகத்தால் இனை புறுமோ தந்தைக் கெதிராசா, உன் புதல்வனன்றோ உரை யாய யான் ஆதலால் உன் போகநனன்றோ எனையொழிந்த நாள்" என்றும் உடையவர் தமககுப் பிதாவென அருளிச் செயகையாலும் அநத மாமுனிகளே தமது திருமேனி தளர்நது நோவு சாத்தியருளியபோது "தாய்மனம் நின் றிரங்கத தனியே நெடுமால் துணையாப் போயின வான மாமலை ஜீயருக்கு" என்று ஸ்ரீமுகம் அனுப்பியவற்றில் அவரைத் தமக்குப் புத்திரனுக அருளிச் செய்கையாலும் வானமாமலை எம்பெருமானும் மேலநிகழும் இவைகளைச் சிந்தித்தே அவவாறு திருநாமம் சாற்றினன் என்னக் குறையில்லை.

மேலும் ஸர்வஜ்ஞரான மாமுனிகளும் பெருமாள் நியோகததையும் அவதார ரஹஸ்யத்தையும் அறியுமவ ராகையாலேதான் கந்தாடையார் நூற்றிருபது திருநாமங் களும் மற்றும் தன்னை ஆச்ரயிக்க வந்திருந்த திருநாமங் களுமான ' அநேக சிஷ்யர்களின் கோஷ்டி நடுவே 'ஸமுநிஸ் ஸௌம்யஜாமாதா ஸர்வேஷாமேவ பச்யதாம்| ஸ்ரீஸகஸ்ய நிதேசேந சிசரியே தேசிகசரியா" என்கிற படியே தாம் ஆசார்ய லக்ஷ்மியால் மிகவும் உஜ்வலராய் விளங்காநிற்கச்செய்தே தமது பக்கத்தில் தமக்குப் பரிசர்யைசெயது போரும் வானமாமலை ஜீயரை அவர் களுக்குக காட்டியருளி, "இவா நமக்கு ப்ராணஸுஹ்ருதது, நமக்கு உண்டான அதிசயங்கள் எல்லாம் இவருக்கும் உண் டாகவேணும் நமக்கு முதலியாண்டான் திருவம்சததில் ஸம்பநதமுணடானுப் போலே இவருக்கும் உண்டாக வேணும" என்று அருளிச்செயது இவரைத தமது ஆஸநத் திலே இருத்தித் தமககு அஸாதாரணமான திருக்கையிலாழ் வார்களையும் இவா திருக்கைகளிலே ஸாதித்து, அப்பாச் சியாரணு முதலானோர் சிலரை அணடையிலே உட் காரச்செய்து, அவர்களைக் காட்டி, " ஸமாச்ரயணம் ஸாதி

யும்'' என்று நியமித்து, ஜீயரும் ஸங்கோசத்தாலே இருக்க, நமக்குப் ப்ரியமான இதைச் செய்ய வேணுமென்று நிர்ப்பந்தித்து அப்பாச்சியாரண்ணா முதலானோருக்கு ஸமாச்ரயணம் ஸாதிக்கச் செய்ததும், பின்பு க்ரமேண வானமாமலை ஜீயருக்குத் தமக்குப்போலே அஷ்ட திக்கஜாசார்யர்களை ஏற்படுத்தியதும், மஹார்யரைக் கொண்டு இவருக்குத் தனியனிடுவித்ததும், அத்தனியனைத் தன் தனியனோடு அவிபக்தமாய் ப்ரபந்த ஆத்யந்தங்களிலே ஸேவிக்கும்படி நியமித்தருளியதுமாகும். வானமாமலை தெய்வநாயகனும் இதை அங்கீகரித்து, அவ்வண்ணமே நியமித்து அஸாதாரண ஸர்வாசார்யபதத்திலே இவரை முடிசூட்டி, ''குன்றமெடுத்தானடி சேரிராமானுசன் தாள் பிடித்தார்'' என்கைக்கும் இவரை எல்லை நிலமாக்கி யருளினார்.

இப்படி இவரை ஆசார்ய புருஷர்கள் கோஷ்டியில் தம்முடைய ஸ்தானத்திலே இருத்தி ஸமாச்ரயணம் ஸாதிக்கும்படி நியமித்து, மற்றைய ஆசார்ய புருஷர்கள் இத்தகைய ஸத்காரம் தங்களுக்கு அலப்யமென்று பேசிக்கொள்ளும்படி ஸ்வஸ்தானத்தில அபிஷிக்தராகக்குகைக்கு அடியென்? எனனில் ஸர்வேச்வரன் குருபரம்பரையை ஸங்கல்பித்த போதே எம்பெருமானார் தொடங்கி ஆரோஹண க்ரமத்தில் தான எல்லைநிலமாய அவரோஹண க்ரமத்தில வானமாமலை ராமானுஜ ஜீயர் எல்லைநிலமாய இவ்வாறாக குருபரம்பராஹாரம உடையவருக்கு முன் ஒன்பது ஆசார்ய ரத்னங்களாலும பின் ஒன்பது ஆசார்யரத்னங்களாலும் விளங்குவதில், தலையில ''பல தேவர்க்கோர் கீழ்க்கன்றாய'' என்கிறபடியே ராமானுஜனை தானும், நடுவில் ''கலௌ கச்சித் பவிஷ்யதி'' என்ற ராமானுஜனும், கடையில் 'தச்சிஷ்யாக்ரஸரோபரோ விஜயதே ராமானுஜாக்யோ முனி:'' என்கிற ராமானுஜனுமாய் நின்று, தலையிலும் நடுவிலும் கடையிலுமாக ராமானுஜ ரத்ந த்ரயத்தாலே அலங்கரிக்க ஸங்கல்பித்ததை அடியொற்றியதாயிருக்கும்.

மேலும் ஸ்வப்நமுகமாக நம்பெருமாள் நியமனத்தைக் கொண்டு மாமுனிகளை ஆச்ரயிக்க எழுந்தருளியிருந்த கந்தாடையாருடையவும் மற்றும் பல சிஷ்யர்களுடையவும் கோஷ்டியிலே இப்படி இவரது அஸாதாரண ஆசார்யத்வத்தை மாமுனிகள் வெளியிட்டது தம்முடைய ஸம்பந்தம் பகவானுக்கு அபிமதமாய ஆசார்யகுலஜாதகர்க்கும் தேஜஸ்கரமாமாப்போலே தம்முடைய அம்சமேவானமாமலை ராமானுஜ ஜீயராகையாலே பின்பும் ஆசார்யகுல ஜாதகர்களும் ஸந்ததி விச்சேதம், பால்யத்திலேயே பித்ருவிச்சேதம் முதலியவற்றால் ஸ்வஸம்பந்த விச்சேதம் நேரிட ப்ராப்தமான பொழுதும், இந்த முனிவரது ஞானஸந்ததி ஸம்ப்ரயணமும் ஸ்வஸம்பந்த ஸம்பாதகமாய் தேஜஸ்கரமுமாய் இருக்கும் என்பதை அறிவிக்கைக்காகவே என்னத் தட்டில்லை.

மேலும் ஒரு ஸமயம் பெரிய பெருமாளும் மணவாள மாமுனிகளுடையவும் வரமங்கை முனிவருடையவும் ஐக்யத்தைக் காட்டத் திருவுள்ளம் பற்றியே இவ்விருவரும் திருமுன்பே நின்று மங்களாசாஸநம் செய்தருளும் காலத்திலே தம்மடியாரான அர்ச்சகர் ஒருவரை ஆவேசித்து பூபாலராயனிலிருக்கிற லக்ஷ்மீநாராயண விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி சிஷ்யரான வானமாமலை ஜீயரைத் தாமரைக்கண்களால் நோக்கியருளி, "ஜீயரே நாம் அரங்க நகரப்பன் உம்தாசார்யருக்கும் உமக்குமாகத் திருவாராதனமாக வருகிறோம்" என்றருளிச் செய்து வானமாமலை ஜீயர் திருக்கைகளிலே ஸாதித்தருளினார் இதனாலே பெரிய பெருமாளும் இவ்விருவர்களுடையவும் அபேதத்தை நன்கு காட்டியருளினாராயிற்று.

நிற்க, முன்பு பாற்கடல் பாம்பணைமேல் பள்ளி கொண்ட பரமனைப் பிரமன் ஆதரித்து ஆராதிக்க அதன் பலமாக அவனுக்கு அப்பரமன் ஸ்ரீரங்கவிமானத்தைத்

தந்தருளினான். திருவரங்கப் பெருநகருள் பொன்னி தெண் ணீர்த் திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளு மப்பர மன், தாமே உகந்து தமது உகப்பின் பலனைய அரங்கநகர் அப்பனை க்ருபைசெய்து தந்தருளினான். "சிஷ்யாசார்ய தநுத்வயீம்" என்கிறபடியே சிஷ்யாசார்ய க்ரமத்தாலே முன்பு நாராயணனாகவும் நரனாகவும் சரிய:பதி அவதரித் தருளினான் இபபொழுதோவெனில "ஸௌம்யோப்யந்தா முநிஸ் தசசிஷ்யா க்ரஸரோ பரோ விஜயதே ராமா நுஜாக்யோ முநி:" என்கிறபடியே "திருவநந்தாழ்வான் ஒருவர் ஆசார்யரான மணவாள மாமுனிகளாகவும் மற் றொருவர் அவரது சிஷ்யரில முதலில் எண்ணப்படும் வான மாமலை ராமானுஜ முநியாயும் அவதரித்து ப்ரகாசிக்கின்றார்" என்றும் "ஸ்ரீராமானுஜ யோகிந: ப்ரதிநிதிர் வாநாதரி யோகீச்வர:" (இந்த வானமாமலை ஜீயர் எம்பெருமானா ருக்கு ப்ரதிநிதியாவர்) என்றும், "ரேகாயத்பதயோ:" (எந்த மணவாளமாமுனிகளின் பாத ரேகையோ இம்முனி வர்) எனறும் இவ்வாறு ஞாநாதிகரான மஹான்களும் இவ ரைப்பற்றி அருளிச் செய்துள்ளார்கள்.

இன்னமும் மாமுனிகள் வட தேசங்களில் எங்கும் திக் விஜயம் செய்து ராமானுஜ தர்சந ஸ்தாபநம் பண்ணி வரும் படி தனக்கு ப்ரதிநிதியாய் ஸ்ரீ வானமாமலை ஜீயரை நியமித் தருளியபடியாலும் மேலும் தமது அந்திமதசையிலே பிதா, தாயப்ராப்தமான தனத்தை புத்ரன் தூர தேசஸ்தனானாலும் அவனிடம் சேர்ப்பிக்கும்படி அறிவிக்குமாபோலே, தமது ஆஜ்ஞையின்படி வட தேச யாத்ரைக்கு எழுந்தருளியிருக் கும் வானமாமலை ஜீயரிடம் தமது திருக்கையில் தரித்துள்ள த்ரிதண்டத்தில உபதணடத்தையும் ஓராண்வழி பரம்பரா ப்ராப்தமான திருவாழி மோதிரததையும் ஸ்வாசார்யரான திருவாயமொழிப பிள்ளையின் திருவடி நிலைகளையும் கொடுககவேணுமாக ஜீயா நாயனாரை நியமித்தும், அவ ரைத தமக்குப பெருக்க திருவத்யயனம் செயயச் சொல்ல

வேணுமாய் நியமித்தும் மாமுனிகள திருநாட்டுக் கெழுந் தருளினமையாலே, அவை வானமாமலை ராமானுஜ ஜீய ருக்கு ப்ராபதமாகி இபபொழுதும பிடிததார் பிடித் தாரைப்பற்றித தரித்து வருகையாலே இந்த வானமாமலை ராமானுஜ ஜீயரே ' குனறமெடுததானடிசேர் .பற்றி " என்கைக்கு எலலைநில மென்றும், எனவே இவருடைய ஆசாரயத்வம் அநிதரஸாதாரணமென்றும் ப்ராசீனர்க ளான ஆசாரய குலஜாதர்களும் அங்கீகரிதத தொன்றுகை யாலே இனி இதைப்பற்றி பரக்கபபேசுவது ஆவச்யகமன்று.

மணவாளமாமுனிவன் பொன்னடியாம் செங்கமலப் போதுகள் என்பதும் இந்த வானமாமலை ஜீயரேயாவர் ஏனெனில்? திருமலையில் பெரிய ஜீயா ஸ்வபநததில ஸேவை ஸாதிததபோது பெரிய திருமேனியோடு சயநிததுக் கொண டிருநத அழகிய மணவாளப பெருமாள நாயனார் திருவடிப் பக்கத்தில் அஞ்ஜலிஹஸ்தராய விநீதராய ஸேவைஸாதிதத இவா திருநாமம் எனனென்று அருகே யிருநதவாகளைக் கேட்க அவர்கள் இவரை பொற்கால ஜீயரெனக் கூறிய தும் தேசாந்திரத்திலிருந்து திருமலைக்கு எழுநதருளியிருநத சிலர் அதற்கநுகுணமாக அழகிய மணவாளப பெருமாள் நாயனார் தமது சிஷ்யரான வானமாமலை ஜீயரை "பொன் னடிக்கால்ஜீயர் என அழைப்பர்" எனக் கூறியதும், வான மாமலை ஜீயா ஸங்யஸிததுபபின் வந்து மாமுனிகளைத் தண்ட னிட்டபோது " ஸ்வாணபாத ஸமாகயோ ஸீதயாலிங்க்யா தரபூர்வகம் " என்கிறபடியே ஸ்வர்ணபாதர் (பொனனடிக் கால்) ஜீயர் என்று அழைத்ததாகவும் தெரிவதால் மண வாளமாமுனிகளே தாமுகந்து இவருக்குச சாத்திய திருநாம மாகையாலே இவரே மாமுனிகளின பொன்னடியாம் செஙக மலபபோது எனறுரைக்கத் தட்டில்லை.

" பொனனடிக்கால ஜீயர் " என்பதற்குப பலவாறு பொருள்கொள்ளலாம். பொன் - ஆசைப்படத் தகுந்த

அடி, அடிவைப்பையுடைய கால்திருவடிகளை உடைய ஜீயர் என்பது ஒன்று. அதாவது ஆச்ரிதர் பலரும் "மன்னிய செஞ்சொல் மணவாளமாமுனி வணகழ-லுன்னிய கொண்டவிராமானுச னிணை பதங்கள் தண்ணிய நெஞ்சில் தரிக்க வல்லாரவர் தம்பதத்தைச-சென்னியில் சூடவல்லார் விண்ணுளாரிலும் சீரியரே" என்றவாறு.

அன்றியே [1]"ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர ப்ரஸாத ப்ரதமாஸ்பதம்" என்கிறபடியே மாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்த சிஷ்யர்களுள் இவரே முதலாமவராகை யால் மாமுனிகளும் தமக்கேற்பட்ட சிஷ்ய ஸம்ருத்தி முதலிய பெருமை இவர் கால் நலத்தால் உண்டானதாகக் கருத்தில் கொண்டு பொற்கால் ஜீயர் என இவரை அழைப் பர் எனவும் கூறுவர் பெரியோர்.

அன்றியிலே "பொன்னடி" என்று எண்ணிறந்த சிஷ்யர்களுக்கு ஸ்ப்ருஹணீயமான (ஆசைப் படும்படியான) திருவடிகளையுடையவர் என மாமுனிகளைக் கூறி, "கால்" என்று அவரது ப்ரதம சிஷ்யரும் அந்தரங்கருமான வான மாமலை ஜீயரைக் கூறுகிறது எம்பெருமான் திருவடிகளைச் சடகோபனென்றும், சடகோபன் திருவடிகளை இராமா னுஜன் என்றும், இராமானுஜன் திருவடிகளை முதலி யாண்டானென்றும் அந்தரங்கரான அடியார்களின் திரு நாமத்தாலேயே சேஷியின் திருவடிகளைப் பேசுவது உயர்ந் தோர்களின் வழக்கல்லவா? எனவே அண்ணன் முதலிய மாமுனிகளின் அஷ்டதிக் கஜங்களும் அவரை ஆச்ரயிப்ப தற்குப் புருஷகார பூதராய ப்ரதான பூதரான அந்தரங்கர் வானமாமலை ஜீயரே ஆகையாலும் ஸ்வர்ண பாதஸமாக்யை யுள்ளதும் அவருக்கே யாகையாலும் மாமுனிகளின் திருவடி வரமங்கை மாமுனியேயாவர். திருவேங்கட ஜீயா பட்டர்

---

1 रम्यजामातृयोगीन्द्र-प्रसादप्रथमास्पदम् ।

பிரான் ஜீயர் போன்ற அஷ்டதிக்கஜங்களுள் ஒருவருக்கும் "பொன்னடி" என்னும் திருநாமம் ஒருவராலும் சாற்றப் பட்டதாகத் தெரியாமையாலும், கீழக் கூறியபடி மாமுனிகள சிஷ்யாவதாரமாய அநதரங்கராகையாலும் வாநாத்ரி ஜீயரே மாமுனிகளின் பொன்னடி என அழைக்கத் தகுதியுள்ளவர் எனப பெரியோர்களின் திருவுள்ளமாகும். [1]"ரேகா யத்பத பத்மயோ:" என்றும், [2]"பாதரேகாமயம் ஸதா" என்றும் மணவாள மாமுனிகளுக்கு நிழலு மடி தாறுமாய்ப் பெரியோர்கள் கூறுவதும், "ஸ்வர்ணபாதஸமாக் யோஸி" என மாமுனிகளே கூறுவதும், "ஸ்வர்ணுதிபத ஸம்ஞக:" என்று திருவேங்கட ஜீயர் ஸ்வப்நத்திலே பொன்னடிக்கால்ஜீயர் இவர் என்ற லோகோக்தியும் தர்சித மாகையாலே இப்படி ப்ரஸித்தமான இவருடைய பெயரை யிட்டே மாமுனிகள் திருவடிகள வழங்கத் தகுதியுடையத் தாதலால் பொன்னடியாம் செஙகமலப் போது என்பது இந்த ராமானுஜ ஜீயரே ஆவார். செஙகமலப் போது (புஷ் பம்) போன்ற பொனனடியெனறு சப்தார்த்தம் இததகைய மாமுனிகளின் பொன்னடிககள வானமாமலை ராமானுஜ ஜீயரே யாவர்.

இவர் பால்யத்தில் உபநீதராய் உடனே திருவாய் மொழிப் பிள்ளை முன்னிலையில் அழகிய மணவாளப் பெரு மாள் நாயனூர் திருவடிகளில் ஆச்ரயித்து ப்ரதம கடாக்ஷம் பெற்று, அவர் முகத்தாலேயே ஸகல சாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, ஆசார்யன் திருவடிகளில் ஏகாந்த கைங் கர்யத்தை உத்தேசித்து ஸநயஸித்தவராய் வானமாமலை ராமாநுஜ ஜீயர் என்று வானமாமலைப் பெருமாள் திருநாமம் சாற்றப் பெற்றவராய ஸ்வாசார்யன் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பிக்க, ஸ்வாமியும் உகநது பொன்னடிக்கால

---

[1] रेखायत्पदपद्मयोः । [2] पादरेखामयं सदा ।

ஜீயரென்று திருநாமம் சாற்றப்பெற்றவராய், ஆசார்ய கைங்கர்ய நிரதராய் பெரிய ஜீயர் திருவடிகளிலே ஸர்வ காலமுந் தொடர்ந்தடிமை செய்யுமவராயிருப்பர்.

